Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month


பெங்களூரில் **குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்**

நவம்பர் 12
சனிக்கிழமை

நேரம்: காலை 9.30 மணி முதல்
மதியம் 2.00 மணி வரை

Place
India Campus Crusade for Christ Auditorium
Hennur Main Road, St. Thomas Town,
Kacharakanahalli,Lingarajapuram,
Bengaluru - 84



தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா
Mrs. மார்கிரேட் ஸ்திரா

தொடர்புக்கு : 0431 - 2765386, 2741925 & 95663 83350

நாகர்கோவிலில் **உங்கள் விடுதலையின் நாள்**

நவம்பர் 12
சனிக்கிழமை

நேரம்: காலை 9.30 மணி முதல்
மதியம் 1.00 மணி வரை

இடம்:
அபிஷேக் காம்ப்ளக்ஸ்
மெத்தை கடை மாடி, W.C.C ரோடு,
நாகர்கோவில்.



செய்தி & ஜெபம்
Rev. Dr.A. ஜாஷ்வா

தொடர்புக்கு : 94888 45627, 80987 42638


Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,


# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்:8 இதழ்:11 நவம்பர் 2022 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL:8 ISSUE NO : 11 November 2022 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-

# தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்...

யோபு 42:2



# சிறுநீரகக் கோளாறினால் மரிக்கும் நிலையிலிருந்த மகனை உயிர்ப்பித்த சர்வவல்ல தேவன்!



என் மகன் பெயர் மோகன்ராஜ். அவன் ஐந்து வயது சிறுவனாக இருக்கும்பொழுது இரு சிறுநீரகமும் பாதிக்கப்பட்டு, சரீரம் மிகவும் வீங்கி ஆபத்தான நிலையில் இருந்தான். அனைத்து பெரிய மருத்துவமனையிலும் மகனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் சுகம் கிடைக்கவில்லை. இருப்பினும் நாங்கள் விடாமல் ஒவ்வொரு மருத்துவமனையாகத் தேடி தேடி சென்றுக்கொண்டிருந்தோம். அப்பொழுது உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் எங்களிடம், **"மரிக்கப்போகிற பையனை வீணாக தூக்கிக் கொண்டு ஏன் அலைகிறீர்கள்"** என்று கேட்டார்கள். இதை எங்களால் தாங்கவே முடியவில்லை.

மருத்துவர்களாலும் கைவிடப்பட்ட நிலையிலிருந்த மகனை நினைத்து தினந்தோறும் கண்ணீர்விட்டோம். இருபது வருடங்களுக்கு முன் ஒரு நாள் எங்கள் தெருவில் வீட்டிற்கு வீடு வந்து ஒரு நோட்டீஸ் கொடுத்தார்கள். அந்த நோட்டீஸ்-ல் இயேசுகிறிஸ்து செய்த அநேக அற்புதங்களைக் குறித்தும், **Dr.ஆனந்த ஸ்திரா** என்னும் ஊழியரின் கூட்டம் நடைபெறுகிற விபரமும் அதில் எழுதப்பட்டு இருந்தது. அதைப் படித்தவுடன், சகோதரரின் கூட்டத்திற்கு சென்றால் என் மகனும் பிழைப்பான் என்ற நம்பிக்கையோடு மகனை தூக்கிக் கொண்டு கூட்டத்திற்கு வந்தேன். கூட்டத்திற்கு ஏராளமான மக்கள் வந்திருந்தார்கள். நான் கடைசி வரிசையில் மகனை கீழே கிடத்தி கண்ணீரோடு அமர்ந்திருந்தேன்.

சகோதரர் அவர்கள் ஜெப வேளையில் **"இங்கு ஒரு சகோதரி மரிக்கும் தருவாயில் உள்ள மகனை தூக்கிக் கொண்டு வந்துள்ளீர்கள், அழாதீர்கள்! ஜீவனுள்ள தேவன் தாமே உங்கள் மகனுக்கு சுகத்தை தருகிறார்"** என்று கூறினார்கள். அதன்பிறகு கூட்டம் முடிந்து அங்கு வந்திருந்த எல்லா மக்களுக்கும் சகோதரர் ஜெபம் செய்யும் வரைக்கும் நான் பொறுமையோடு காத்திருந்தேன். கடைசியாக சகோதரரிடம் எனது மகனை தூக்கிச் சென்றேன். அவர்கள் என்னை பார்த்து **"சகோதரியே, பொறுமையோடு நீ காத்திருந்தபடியால், உன் மகன் பூரண சுகமடைவான். அவன் மரிக்கும் வரைக்கும் இந்த வியாதி அவனை தாக்காது, ஆகவே அழாமல் வீட்டிற்கு போ"** என்று கூறி ஜெபித்து அனுப்பினார்கள். நம்பிக்கையோடு வீட்டிற்கு வந்தேன். அன்று இரவே மகனுடைய சரீரத்தில் அடைபட்டிருந்த சிறுநீர் முழுவதும் வெளியேறியது அவனது சரீரம் இலகுவாக மாறியது. இது எங்களுக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. மகனின் உடல் வீக்கம் மாறியது. மறுநாள் இயல்பு நிலைக்கு வந்து, நன்றாக நடக்க ஆரம்பித்தான், பேச ஆரம்பித்தான், சாப்பிட ஆரம்பித்தான். பள்ளிக்கும் சென்றான். இப்பொழுது அவனுக்கு 25 வயதாகிறது. ஐ.டி.ஐ. முடித்து, ஒரு பெரிய நிறுவனத்தில் சூப்பர்வைசராக வேலை செய்கிறான். என் மகனுக்காக ஜெபித்த சகோதரர் அவர்களுக்கு எங்கள் நன்றிகளைத் தெரிவிக்கிறோம். கர்த்தருக்கே மகிமை!

**- திருமதி. கண்மணி, சேலம்**

## அற்புத சுகத்தைத் தந்த அதிசய தேவன்!



எனது மூத்த மகனுக்கு திருமணமாகி அயல்நாட்டில் வேலை பார்த்து வருகின்றான். அவனுக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டு மிகவும் கஷ்டப்பட்டான். மகனுக்கு பேச்சு வரவில்லை, தொண்டையிலும் பிரச்சனை ஏற்பட்டது. இந்த இக்கட்டான நிலையில் எனது மருமகளும் மகன் கூடவே இருந்தாள். மகன் நிலை குறித்து என்னிடம் தெரிவித்தார்கள். நான் மிகுந்த கவலையடைந்தேன். உடனடியாக **Rev.Dr.A.ஜாஷ்வா** அவர்களை தொலைப்பேசியில் தொடர்புகொண்டு மகன் நிலையைக் குறித்து கூறினேன். அவர்கள் **"அழாதீர்கள் மகனுக்கு ஒன்றும் ஆகாது என தைரியப்படுத்தி ஜெபித்தார்கள்"** அதன் பிறகு எனக்கு ஒரு நம்பிக்கை வந்தது. **ஜெபத்தை கேட்டு கர்த்தர் மகனுக்கு நல்ல சுகத்தை தந்தார். கொரோனாவிலிருந்து மகன் மீண்டான். அதுமாத்திரமல்ல, பேசவும் ஆரம்பித்தான், தொண்டையில் இருந்த பிரச்சனையும் நீங்கியது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!**

**- திருமதி. டெல்பின்மேரி, சென்னை.**

## தடைகள் நீங்கியது! திருமணம் ஆசீர்வாதமானது!



எனது மகனின் திருமணம் கால தாமதமாகி கொண்டு இருந்தது. அவன் திருமணத்திற்காக பாஸ்டர் அவர்களிடம் ஜெபிக்கும்படி சொன்னேன். **கர்த்தர் அவர்கள் ஜெபத்தை கேட்டு தடைகளை நீக்கினார். கடந்த ஏப்ரல் மாதம் பெங்களூரில் திருமணம் ஆசீர்வாதமாக நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். நல்லதொரு மருமகளை கர்த்தர் கொடுத்தார். எங்களுக்கு ரொம்ப சந்தோஷம். ஜெபத்தைக் கேட்டு அற்புதம் செய்த தேவனை துதிக்கின்றேன்.**

**- திருமதி. பிரதீபா, சென்னை.**

எனது இரண்டாவது மகனுக்கு திருமணம் தடைப்பட்டு கொண்டே போனது. அவனுக்காக **பாஸ்டர் ஜாஷ்வா** அவர்களிடம் சொல்லி ஜெபித்தோம். **கர்த்தர் அவர்கள் ஜெபத்தைக் கேட்டு மகனின் திருமணத்தை மிகுந்த ஆசீர்வாதமாக நடத்தி தந்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

**- திருமதி. டெல்பின்மேரி, சென்னை.**

## சமாதானத்தைத் தந்த சமாதானப் பிரபு



என் மனதில் இரண்டு வருடமாக ஒருவித மனபாரம் இருந்து கொண்டு, என்னை அழுத்திக் கொண்டே இருந்தது. நான் இந்த மனபாரத்திலிருந்து விடுதலைஆக முடியாமல் தவித்துக்கொண்டிருந்தேன்.

**Rev.Dr.A. ஜாஷ்வா** அவர்கள் மதுரையில் **உங்கள் விடுதலையின் நாள் கூட்டம்** நடத்துவதை அறிந்து கூட்டத்திற்கு வந்தேன். ஜெப வேளையில் சகோதரர் அவர்கள் பெலவீனமான இடத்தில் கைகளை வைத்து ஜெபிக்கச் சொன்னார்கள். அப்பொழுது **நான் என் இதயத்தில் கையை வைத்து ஜெபித்தேன். அந்த நொடிப் பொழுதில் என் மனபாரம் நீங்கியது. ஒரு நிறைவான சமாதானம் என்னை நிரப்பியதை நன்கு உணர்ந்தேன். கர்த்தர் கொடுத்த சமாதானத்திற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். சகோதரர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.**

**- சகோ. டேவிட் கண்ணன், மதுரை**



# அன்பரின் ஊழியம்

மலர்:8 ◆ நவம்பர் 2022 ◆ இதழ் 11

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் எங்களுக்கு மிகவும் பிரியமான பங்காளர்களுக்கு, அன்பின் வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம். எங்களுக்காக ஜெபித்தும், ஊழியத்தை தாங்கியும் வருகிற உங்களுக்கு கர்த்தர் சகலவித நன்மைகளையும் நிறைவாக தந்து ஆசீர்வதிப்பாராக!

**லூக்கா 17:12-19 வரையுள்ள வசனங்களில் குஷ்டரோகமுள்ள மனுஷர்கள் பத்துப் பேரை இயேசு சுகமாக்கினார். அதில் அந்நியனாகிய ஒருவன் மட்டும் திரும்பி வந்து இயேசுவின் பாதத்தில் விழுந்து அவரை ஸ்தோத்திரஞ் செலுத்தினான் என்பதை நாம் அறிவோம்.**

**உங்களுடைய வாழ்க்கையிலும் இந்த ஆண்டின் துவக்க முதல் இம்மட்டும் கர்த்தர் ஏராளமான நன்மைகளை செய்திருப்பார். அதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி அவரை மகிமைப்படுத்துங்கள். கர்த்தருக்கு பொருத்தனை செய்து அதை நிறைவேற்றாமல் இருந்திருந்தால் இந்த மாதத்தில் அந்த பொருத்தனையை நிறைவேற்றுங்கள்.** ஒரு சிலர் என் வாழ்க்கையில் கர்த்தர் ஒரு நன்மைக்கூட செய்யவில்லையே என்று நினைக்கலாம். சோர்ந்து போகாதிருங்கள். நாம் விடுகிற ஒவ்வொரு மூச்சும் கர்த்தருடைய சுத்த கிருபையே! ஆகவே உற்சாகமாய் கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள்.

அக்டோபர் மாதம் நாகர்கோவில், திருநெல்வேலி, சென்னை, செகந்திராபாத் மற்றும் திருச்சியில் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். அநேக மக்கள் கூட்டத்தில் பங்குபெற்று தேவ ஆசீர்வாதத்துடன் சமாதானத்துடன் சென்றனர். **இந்த மாதம் நாகர்கோவில், பெங்களூர் மற்றும் திருச்சியில் நடைபெறயிருக்கிற கூட்டங்களுக்காகவும், நல்ல காலச் சூழ்நிலை இருப்பதற்காகவும் ஜெபியுங்கள். நமது கூட்டங்கள் வாயிலாக கர்த்தர் உங்களுக்கு செய்த நன்மைகளை எங்களுக்கு கடிதம், இ.மெயில், தொலைபேசி வாயிலாக தெரியப்படுத்துங்கள்.**

ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

சந்தா விபரம்

| | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |


அவசர ஜெப உதவிக்குத் தொலைபேசி எண்கள்: **(0431) 2765386, 2765952, 2760603, 2760604, 2760605** (24 மணி நேரமும்)

**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205

e-mail: **info@mojindia.org** website: **www.ministryofjesus.in**

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

கடந்த மாதம் **S.J.Saves Trust** மூலம் ஏழை, எளிய பெண்களுக்கும் மற்றும் ஏழை பிள்ளை களுக்கும் பல உதவிகளை வழங்கினோம்.

**இந்த பத்திரிக்கையின் நடுபகுதியில் அன்பரின் ஊழிய நீண்ட நாள் பங்காளர் களுடைய சாட்சியை வெளியிட்டுள்ளோம். மறவாமல் பாருங்கள். உங்களையும் இப்படி சாட்சியாக கர்த்தர் நிறுத்த வேண்டும் என நாங்கள் தொடர்ந்து ஜெபிக்கிறோம்.**

**Ministry of Jesus you tube** சேனல் வாயிலாக தினந்தோறும் அதிகாலை 5.00 மணிக்கு வருகிற அனுதின அற்புதம் நிகழ்ச்சியை பாருங்கள். **அந்த நிகழ்ச்சியில் வாக்குத்தத்த செய்திகளும், தீர்க்கதரிசன ஆசீர்வாத ஜெபத்தையும் நாங்கள் ஏறெடுக்கிறோம். அது உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும். ஆகவே தவறாமல் பாருங்கள். உங்கள் நண்பர் களுக்கும் share செய்யுங்கள்.**

எங்கள் அப்பா, அம்மாவின் நல்ல சுகத்திற் காகவும், எங்கள் அனைவருக்காகவும், ஊழியத்திற்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

உங்களுடைய முக்கியமான ஜெபகுறிப்பு களையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நாங்கள் தொடர்ந்து உங்களுக்காக ஜெபிக்கி றோம்.

எங்களை தனியே சந்தித்து ஜெபிக்க விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக் கொண்டு முன் அனுமதி பெற்று வாருங்கள். தொலைபேசி எண்: 94888 45627

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**

**இம்மாத வாக்குத்தத்தம்**

**ஏசாயா 61:9, சங்கீதம் 103:17**
**நாகூம் 1:15, யோவான் 14:27**

## இதயம் தொட்ட எண்ணம்

**தரித்து நில்... அவர் உன் வாழ்க்கையை கட்டமைக்கிறார்!**
**தரித்து நில்... அவர் உன்னை சுற்றி இருப்பவைகளை சீரமைக்கிறார்!**
**தரித்து நில்... அவர் உன்னை தம் ஆவியால் நிரப்புகிறார்!**

**Be Still... He is Restructuring your life!**
**Be Still... He is Realigning everything around you!**
**Be Still... He is Replenishing you with His Spirit!**

ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. | Account No. | Account No. |
| 10848469699 | 10848559426 | 10848474869 |

State Bank of India, Cantonment, Trichy Main Branch
IFS Code : SBIN 0000930

மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 95004 87061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code -- ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 95004 87061 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.

## எமது You Tube சேனல்களை Subscribe செய்யவும்



Ministry of Jesus - Dr. Ananda Stira



Dr Jane Joshua

My Deliverance Church

## எமது முகநூல் பக்கங்கள் (Face book)

- Ministry of Jesus (Anbarin Oozhiyam) @ministryofjesus.in
- Ananda Stira @dranandastira
- Margretstira
- Jane Joshua @DrJaneJoshua
- My Deliverance Church @mydeliverance.church
- Rev.Dr.A. Joshua @RevDrAJoshua

Ministry of Jesus
dr. janejosh
jonathanmosesrajstira

ministryofjesus.in

drjane15

## கன்னியாகுமரி மற்றும் சென்னை பகுதியிலுள்ள அன்பரின் ஊழியப் பங்காளர்கள் கவனத்திற்கு

நமது அன்பரின் ஊழியப் பிரதிநிதிகளாக கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் எனவே உங்கள் ஜெப வேண்டுதல்களை அவர்களிடம் கூறி ஜெபித்துக் கொள்ளலாம். மேலும், நமது ஊழிய விபரங்களையும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

கன்னியாகுமரி : 82203 17472
சென்னை : 77081 53666



# தேவனால் கூடும்

## (GOD IS ABLE)

தேவ செய்தி : Rev.Dr.A. ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் பிரியமான பங்காளர்களே, அன்பான வாசகர்களே!

இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். இந்த ஆண்டின் துவக்கத்திலிருந்து இன்று வரை நம்மை அனைத்து தீமைக்கும் விலக்கி பாதுகாத்து வருகிற சர்வ வல்ல தேவனை மனதார ஸ்தோத்தரிப்போம். இந்த மாதத்திலும் வாசகர்களாகிய உங்களோடு **"தேவனால் கூடும்"** என்ற தலைப்பில் தேவ செய்தியை பகிர்ந்துகொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

பிரியமானவர்களே! இன்றைக்கு மனிதனால் முடியாத காரியங்கள் என பல இருக்கிறது. ஆனால் நம் பரிசுத்த தேவன் மாத்திரமே சகலத்தையும் செய்யவல்லவராக இருக்கிறார் என்பதை நாம் உறுதியாக அறிந்திருக்க வேண்டும். **"தேவரீர் சகலத்தையும் செய்யவல்லவர். நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்" (யோபு 42: 2)**

**மத்தேயு 19:26-ல் "மனுஷரால் இது கூடாததுதான் தேவனாலே எல்லாம் கூடும்"** என்று இயேசு கூறுகிறார். இந்த உலகத்தில் எந்த ஒரு மனிதனும், எந்த ஒரு சிருஷ்டியும் என்னால் எல்லாமே செய்ய முடியும் என்று சொல்லவே முடியாது. ஆனால் தேவன் ஒருவரே சகலத்தையும் செய்ய வல்லவர் என நாம் உறுதியாக கூறமுடியும். இதைக்குறித்தே வேதத்திலிருந்து சில சம்பவங்களை உங்களுக்கு இங்கு எழுதுகிறேன். வாசித்து ஆசீர்வாதம் பெறுங்கள்.

### 1. பழைய ஏற்பாடு காலத்திலே தேவன் செய்த மகத்தான செயல்கள்

ஆபிரகாம், சாராள் இவர்களுக்கு குழந்தை இல்லை. இருவரும் முதிர்ந்த வயதை அடைந்து விட்டனர். ஸ்தீரிகளுக்குள்ள வழிபாடு சாராளுக்கு நின்றுவிட்டது. ஆபிரகாம் வயது முதிர்ந்தவராகிவிட்டார். அதனால் இனி குழந்தை பிறக்க சாத்தியமில்லை. இவர்களுக்குத்தான் குறித்த காலத்தில் ஒரு குழந்தை பிறக்கும் என உறுதியாக சொல்லப்படுகிறது. **"கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ, உற்பவ கால திட்டத்தில் திரும்ப வருவேன். அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான்" ஆதியாகமம் 18:14.** வயதாகி கொண்டே இருந்தாலும் கர்த்தருடைய வார்த்தை திரும்ப திரும்ப ஆபிரகாமுக்கும், சாராளுக்கும் வந்து கொண்டே இருந்தது. இது சாத்தியமில்லை என்ற ஒரு இறுதி நிலையில் தான் அவர்களுக்கு வாக்குத்தத்தம் வருகிறது.

**ஆதியாகமம் 21:1-3-ல் கர்த்தர் தாம் சொல்லி இருந்தபடி சாராள் பேரில் கடாட்சம் வைத்தார். அவருடைய வாக்குத்தத்தத்தை**

**நிறைவேற்றினார். ஆபிரகாம் முதிர் வயதாக இருக்கும் பொழுது சாராள் கர்ப்பவதியானாள். தேவன் குறித்திருந்த காலத்தில் ஈசாக்கு பிறந்தான். எந்த ஒரு காரியமாக இருந்தாலும் அதில் தேவனுடைய திட்டமும், அவர் குறித்த காலமும் மாறாது. அப்படியே நிறைவேறும்.**

தேவன் குறித்த காலத்திலே ஆபிரகாமுக்கு ஒரு குமாரனை கொடுத்தார். அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிட்டார்கள். ஈசாக்கு என்றால் நகைப்பு என்று அர்த்தம். இது கர்த்தரால் கூடின ஒரு காரியம். இது மனுஷீகத்தில் முடியாது, அறிவியலாலும் முடியாது. தேவனால் மாத்திரமே முடித்த ஒரு காரியமாகும். இது ஒரு கட்டுகதை அல்ல, சரித்திரம்.

மற்றொரு சம்பவத்தை பார்க்கிறோம். **2இராஜாக்கள் 5:1-3-ல் சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமான் என்பவன் தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷனும் எண்ணிக்கையுள்ளவனுமாயிருந்தான். அவனைக் கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார். மகா பராக்கிரமசாலியாகிய அவனோ குஷ்டரோகியாயிருந்தான். சீரியாவிலிருந்து தண்டுகள் புறப்பட்டு, இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு சிறு பெண்ணைச் சிறைபிடித்துக்கொண்டு வந்திருந்தார்கள். அவள் நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தாள். அவள் தன் நாச்சியாரைப் பார்த்து: என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும், அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள்.** அதன்படியே நாகமான் வந்தப்பொழுது எலிசா கூறியது, நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம் பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய் என்றான். தீர்க்கதரிசி எலிசா நாகமானின் மேல் தனது கைகளை வைத்து, ஜெபம் எதுவும் செய்யவில்லை. அதுவே நாகமானுக்கு கோபமும் தயக்கமுமாக இருந்தாலும், **இறுதியாக எலிசாவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நம்பிக்கையோடே யோர்தானில் ஏழுதரம் முழுகினான். குஷ்டரோகம் நீங்கி அற்புத சுகம் பெற்று திரும்பினான். இது எந்த மனிதனாலும் செய்ய முடியாத ஒரு காரியத்தை தேவனே செய்தார்.**

## 2. புதிய ஏற்பாடு காலத்திலே இயேசு கிறிஸ்து செய்த வல்லமையான செயல்கள்

புதிய ஏற்பாட்டு காலத்திலே நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் நடந்தவை அனைத்துமே அற்புதம்தான். மாற்கு இரண்டாம் அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிற அந்த மனிதனுக்கு கை, கால்கள் எதுவும் செயல்படாது. கண்ணும் அசைவில்லாமல் இருக்கிறது. அவனுக்குள்ள வியாதி திமிர்வாதம் என்று சொல்லப்படுகிறது. இயேசு கப்பர்நகூம் வரும்பொழுது அந்த மனுஷனை நான்கு பேர் படுக்கையில் வைத்து சுமந்துக்கொண்டு வருகிறார்கள். ஜனக்கூட்டத்தினிமித்தம் உள்ளே நுழைய முடியாத காரணத்தினால், இயேசு இருந்த வீட்டின் கூரையை பிரித்து, அந்த மனுஷனை அப்படியே கீழே இறக்குகிறார்கள். இயேசு அவனை பார்த்து **"உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட"** என்று கூறியவுடன் அவன் எழுந்து நடந்தான்.

யோவான் ஐந்தாம் அதிகாரத்தில் பெதஸ்தா மண்டபத்தில் 38 வருடமாக வியாதி உள்ள ஒரு மனுஷன் படுத்திருக்கிறான். அவனது வாழ்நாள் முழுவதும் அங்கேயே போய்விட்டது. பல ஆண்டு காலம் வியாதியாக இருந்தவன். இயேசுகிறிஸ்துவால் மட்டுமே சுகத்தை பெற்றான். லாசரு சம்பவத்தை பாருங்கள். அவன் மரித்து நான்கு நாளாகி பிணம் நாறிப் போய் விட்டது. மார்த்தாள், மரியாள் இருவருடைய கண்ணீரைக் கண்டு, இயேசு லாசரை உயிரோடு

எழுப்பினார். லூக்கா 7ம் அதிகாரத்தில், ஒரு வாலிபனை பாடையில் தூக்கிக் கொண்டு வரும் பொழுது இயேசு **"வாலிபனே எழுந்திரு என்றார்"** உடனே அவன் எழுந்தான் குஷ்டரோகியை பார்த்து, எனக்கு சித்தமுண்டு, நீ சுத்தமாகு என்ற இயேசுவின் ஒரு வார்த்தை யினால் தீராத அந்த வியாதி குணமாகிறது.

இயேசு கிறிஸ்து பூமியிலே வாழ்ந்த பொழுது யாருமே செய்ய முடியாத ஒரு அற்புதத்தை செய்தார். **மத்தேயு 14:22-33, மாற்கு 6:45-52, யோவான் 6:16-21** ஆகிய பகுதிகளில் இதை நாம் வாசிக்கலாம். சீஷர்கள் படகை எடுத்துக் கொண்டு கடலுக்கு போய் விட்டார்கள். இயேசு கிறிஸ்து கரையோரம் தனித்து ஜெபம் செய்து கொண்டிருக்கிறார். ஜெபித்துக் கொண்டிருந்தவர், படகு நடுக்கடலில் தத்தளிப்பதை அறிந்துகொள்கிறார். உடனே நான்காம் ஜாமத்திலே இரவு நேரத்தில் இயேசு கடலில் நடந்து செல்கிறார். சீஷர்கள் பேய் என்று நினைத்து பயப்படுகிறார்கள். அப்பொழுது இயேசு **"திடன்கொள்ளுங்கள், பயப்படாதிருங்கள்"** என்கிறார். இது நடக்கின்ற ஒரு காரியமா? ஆம். தேவனால் எல்லாம் கூடும். அவர் மட்டுமா கடலில் நடந்தார். பேதுரு இயேசுவை பார்த்து நீரேயானால் நானும் கடலில் நடப்பதற்கு உத்தரவு கொடும் என்றவுடன் **"நட"** என்கிறார். அவனும் கடலில் நடந்தான். நடந்த உற்சாகத்தில் எதில் நடக்கிறோம் என்ற சந்தேகம் வந்து தண்ணீரை பார்த்தான், முழ்கி விட்டான். விசுவாசம் குன்றி போய்விட்டது. தண்ணீரில் நடப்பது இயேசுவால் மாத்திரமே சாத்தியம்.

**அன்பான வாசகர்களே! இந்த சம்பவங்களை எல்லாம் பார்க்கும் பொழுது இயேசு கிறிஸ்து ஜனங்கள் வாழ்க்கையிலே ஒவ்வொரு காரியத்தையும் மிக எளிதாக செய்தார். குருடரின் கண்களை திறந்தார். செவிடர்கள் கேட்கும் திறனை பெற்றார்கள். முடவர்கள் எழுந்து நடந்தார்கள். மரித்தவர்கள் உயிர் பெற்றார்கள். அப்படியானால் இயேசுவால் முடியாத காரியம் என ஒன்றுமே இல்லை. தேவனால் எல்லாம் கூடும் என்பதையே மேற்கூறப்பட்ட சம்பவங்கள் வாயிலாக நாம் தெளிவாக அறிகிறோம்.**

## 3. ஆதி திருச்சபையில் ஆவியானவர் செய்த வல்ல செயல்கள்

ஆதி திருச்சபையில் நாம் பார்க்கும் பொழுது பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மூலமாக அநேக அற்புதங்களை செய்கின்றார். **அப்போஸ்தலர் மூன்றாம் அதிகாரத்தில்** பேதுருவும், யோவானும் தேவாலயத்திற்கு போகும்பொழுது அங்கே தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாக பிறந்த ஒரு மனுஷன் தேவாலய வாசலில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது பேதுருவும் யோவானும் அவனைப் பார்த்து எங்களிடம் காசு, பணம் ஒன்றுமில்லை. ஆனால் எங்களிடம் இருப்பதை தருகிறோம். **"இயேசுவின் நாமத்தில் எழுந்து நட"** என்று சொன்ன மாத்திரத்தில் அவன் எழுந்து நடந்தான். இது கர்த்தருக்கு இலேசான ஒரு காரியம். யாராக இருந்தாலும் உதவுவது இயேசுவுக்கு இலேசான காரியம். நமக்கு பெலன் இருக்கிறதோ, இல்லையோ நம்மால் முடியுமோ முடியாதோ, பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருக்கும் பொழுது அவரால் எல்லாம் செய்ய முடியும். பவுலின் கைகளினாலே கர்த்தர் பலத்த அற்புதங்களை செய்தார் என்று வேதம் சொல்கிறது.

அன்பு தேவ பிள்ளைகளே! பலத்த அற்புதங்களை உங்கள் வாழ்வில் செய்வதற்கு தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார். நிச்சயம் உங்களுடைய வாழ்க்கையிலும் அவர் அற்புதங்களை செய்வார். உங்களால் முடியாத காரியங்களை தேவன் செய்து முடிப்பார்.

**மனிதர்களாகிய நமக்கு சில வரையறைகள் உண்டு. அந்த வரையறைகளை தாண்டி நம்மால் போக முடியாது. ஆனால் தேவன் வரையறைகளை எல்லாம் தாண்டி போகக் கூடியவர்.**

பிரியமானவர்களே! உங்களுடைய வாழ்க்கையிலும் எத்தனையோ காரியங்கள் நடக்காமல் இருக்கலாம். ஆனால் கலங்காதீர்கள்! தேவனால் எல்லாம் கூடும் அவர் மேல் நம்பிக்கை வையுங்கள், விசுவாசியுங்கள். அப்பொழுது அதிசயங்களை காண்பீர்கள். **இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர் என்னாலே செய்யக் கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ? எரேமியா 32:27.** பழைய ஏற்பாட்டு காலத்திலும், புதிய ஏற்பாட்டு காலத்திலும், ஆதி திருச்சபையிலும் திரியேக தேவன் பலத்த அதிசயங்களை செய்தார். அவர் இன்றும் செய்ய வல்லவராயிருக்கிறார்.

## 4. தேவ மனிதர் ஜார்ஜ் முல்லர் வாழ்வில் நடந்த ஒரு அதிசயம்!

ஜார்ஜ் முல்லர் அவர்கள் நடத்தின ஆசிரமத்தில் ஒரு நாள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு சாப்பிடுவதற்கு ஒன்றுமே யில்லை. அந்த குழந்தைகளை முல்லர் வரிசையாக உட்கார சொல்லிவிட்டார். தட்டுகள் எல்லாம் வைத்தாகிவிட்டது. ஆனால் உண்மையில் அங்கு சாப்பிடுவதற்கு ஒன்று மில்லை. ஆனாலும் முல்லர் தேவன் மீது நம்பிக்கை வைத்தார். **தேவன் தாமே இந்த தேவைகளை சந்திப்பார் என உறுதியுடன், தேவனால் எல்லாம் கூடும் என்ற நம்பிக்கை யோடு இருந்தார்.** குழந்தைகளை ஜெபம் செய்யுங்கள் என்றார். ஜெபித்து முடித்தவுடன் திடீரென்று கதவு தட்டுகின்ற சத்தம், திறந்தவுடன் அங்கே ஒருவர் ஆயிரக்கணக்கான பிரட் பாக்கெட்டுகளை கொடுத்து விட்டு போனார். கொஞ்ச நேரம் கழித்து இன்னொருவர் கதவை தட்டி சொன்னது, பால் கொண்டு செல்கிற வாகனம் பழுதடைந்துவிட்டதால் பால் கெட்டுப்போவதற்கு முன் அதை யாருக்காவது கொடுத்துவிட வேண்டும் என எண்ணின பொழுது, இந்த ஆசிரமத்தை குறித்து கேள்விப் பட்டு இங்கு கொடுக்க வந்தேன் என்று பல ஆயிரம் லிட்டர் பாலை குழந்தைகளுக்காக கொடுத்து விட்டு சென்றார்.

ஆம். அன்பிற்குரிய தேவ பிள்ளைகளே! நம் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. **கேரீத் ஆற்றில் தண்ணீர் வற்றலாம், நம்முடைய ஜீவ ஊற்று கர்த்தரே. (எரே.17:13)** அந்த ஊற்று ஒருநாளும் வற்றாது. அதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எந்த சூழ்நிலையிலும் அவரை நாம் விசுவாசிக்க வேண்டும். நமது தேவைகளை சந்திப்பதற்கு அவர் உண்மை உள்ளவராக இருக்கிறார். அது உங்களுடைய வியாபாரமாக இருக்கலாம், படிப்பாக இருக்கலாம், வேலை யாக இருக்கலாம், திருமணமாக இருக்கலாம், குழந்தை பாக்கியமாக இருக்கலாம், ஆவிக்குரிய வறட்சியாக இருக்கலாம். கலங்காதீர்கள். இந்த சூழ்நிலையை மாற்றி அற்புதத்தை செய்ய கர்த்தர் வல்லவராயிருக்கிறார். **உம்மாலே செய்யக் கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை. எரேமியா 32:17.** ஆம்! அவரால் செய்யமுடியாத அதிசயம் ஒன்றுமில்லை.

**தேவன் உங்கள் வாழ்க்கையில் செயல்படுவதற்கு நீங்கள் 3 முயற்சிகளை கட்டாயம் எடுத்து உங்கள் வாழ்வில் செயல் படுத்த வேண்டும். அப்பொழுது அதிசயங் களை காண்பீர்கள்.**

1. **தேவனை விசுவாசிக்க வேண்டும். (Believe)**
2. **தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும். (Obey)**
3. **பொறுமையோடு காத்திருக்க வேண்டும். (Wait patiently)**

இந்த மூன்று முக்கியமான படிகளை அழகிய ஒரு உதாரணத்தோடு உங்கள் மனதில் பதியும்படி விளக்க ஆசைப்படுகிறேன்.

வண்ணத்துப்பூச்சியை நாம் அனைவருமே விரும்புவோம் வண்ணமயமான, அழகான ஒரு வண்ணத்துப்பூச்சி ஆவதற்கு முன்னால் அது மூன்று நிலையை கடக்க வேண்டும். முதலாவது அது ஒரு முட்டையாக இருக்கும். இது தான் உங்களுடைய விசுவாசம்.

இரண்டாவது முட்டையிலிருந்து ஒரு புழு வரும். அதுதான் நீங்கள் தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும். இந்த நிலையில் புழு அநேக இலைகளை சாப்பிட்டுக்கொண்டு மிக உற்சாகமாக இருக்கும். அதேபோல நீங்கள் கர்த்தர் சொல்வதற்கு எல்லாம் கீழ்ப்படிந்து உற்சாகமாக இருக்க வேண்டும். இந்த புழு நிலைதான் சுறுசுறுப்பாக இருக்கும் காலமாகும்.

மூன்றாவது அது கூட்டுபுழுவாக மாறுகிறது. அது அமைதியான ஒரு கால கட்டம். தன்னை சுற்றி ஒரு கூட்டை அமைத்து அதில் அந்த புழு அமைதியாக இருக்கும். இது தான் காத்திருக்கும் ஒரு நிலை. தேவ சமூகத்தில் வேதம் வாசித்து ஜெபம் செய்து காத்திருக்க வேண்டும். அந்த அமைதியான நிலை ஒரு நாள் உடைக்கப்படும். கூட்டை உடைத்து வரும் பொழுது அழகான வண்ணத்துப் பூச்சியாக வெளியே வருகிறது. இந்த நிலையை அடைவதற்கு அது மூன்று கட்டங்களை கடக்க வேண்டியதாயிருக்கிறது.

**அன்பான தேவ பிள்ளைகளே! உங்கள் வாழ்க்கையிலும் தேவன் அற்புதத்தை செய்ய வேண்டுமானால் முதலாவது தேவனால் எல்லாம் கூடும் என்று விசுவாசிக்க வேண்டும். இரண்டாவது தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும். மூன்றாவதாக பொறுமையோடு காத்திருக்க வேண்டும். அப்படி இருப்பீர்களானால் இந்த வண்ணத்துப் பூச்சியை போல அழகான, பிரகாசமான எதிர் காலத்தை அடைவீர்கள். இந்த பாக்கியத்தை உங்கள் வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டும் என்றால் எனக்கு பெலனை தாரும் கர்த்தாவே என்ற அவரிடம் மன்றாடுங்கள். தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர் என்று முழு இருதயத்தோடு நம்புங்கள், விசுவாசியுங்கள். அப்பொழுது நிச்சயம் தேவனிடம் இருந்து அற்புதங்களை பெற்றுக்கொள்வீர்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!**


விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

ஞாயிறு தோறும்
காலை 9.30 மணி – 11.30 மணி

- ✓ அபிஷேகம் நிறைந்த பாடல்கள்
- ✓ அனல்மூட்டும் தேவ செய்தி
- ✓ உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்



ஜாதி, மத, இன வேறுபாடின்றி
அனைவரும் குடும்பமாக இவ்வாராதனையில்
பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.

Live @ My Deliverance Church

டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்
10–வது குறுக்குத் தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி–18.

# சமாதானம்

# நவம்பர் மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

**நவம்பர் 1**
கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர். (எண். 6:26)

**நவம்பர் 2**
தேசத்தில் சமாதானம் கட்டளையிடுவேன். (லேவி. 26:6)

**நவம்பர் 3**
உன் சமாதானம் நதியைப் போலும், உன் நீதி சமுத்திரத்தின் அலைகளைப் போலும் இருக்கும். (ஏசா 48:18)

**நவம்பர் 4**
உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும். (ஏசா 54:13)

**நவம்பர் 5**
... அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன். (எரே. 33:6)

**நவம்பர் 6**
உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும், உன் அரமனைகளுக்குள்ளே சுகமும் இருப்பதாக. (சங். 122:7)

**நவம்பர் 7**
... உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக்கடவது. அவைகள் உனக்கு நீடித்த நாட்களையும், தீர்க்காயுசையும், சமாதானத்தையும் பெருகப் பண்ணும். (நீதி. 3:1-2)

**நவம்பர் 8**
சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார். (ரோம. 16:20)

**நவம்பர் 9**
உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர். (ஏசா. 26:3)

**நவம்பர் 10**
நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக. (ரோமர் 15:13)

**நவம்பர் 11**
உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு அவர்களுக்கு இடறலில்லை. (சங். 119:165)

**நவம்பர் 12**
சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. (1தெச. 5:23)

**நவம்பர் 13**
தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது. (2பேதுரு 1:2)

**நவம்பர் 14**
உம்முடைய கூடாரம் சமாதானத்தோடிருக்கக் காண்பீர். உம்முடைய வாசஸ்தலத்தை விசாரிக்கும்போது குறைவைக் காணமாட்டீர். (யோபு 5:24)

நவம்பர் 15
நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். (ரோமர் 5:1)

நவம்பர் 16
... சபைகள் சமாதானம் பெற்று, பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின. (அப்போஸ்தலர். 9:31)

நவம்பர் 17
... கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று உங்களுக்குச் சமாதானம் என்றார். (யோவான். 20:26)

நவம்பர் 18
என் கிருபை உன்னை விட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார். (ஏசாயா. 54:10)

நவம்பர் 19
தூரமாயிருக்கிறவர்களுக்கும் சமீபமாயிருக்கிறவர்களுக்கும் சமாதானம் சமாதானம் என்று கூறும் உதடுகளின் பலனைச் சிருஷ்டிக்கிறேன்; (ஏசாயா 57:19)

நவம்பர் 20
... இஸ்ரவேலுக்கோ சமாதானம் உண்டு. (சங். 125:5)

நவம்பர் 21
கர்த்தராகிய தேவன் விளம்புவதைக் கேட்பேன்; அவர் தம்முடைய ஜனங்களுக்கும் தம்முடைய பரிசுத்தவான்களுக்கும் சமாதானம் கூறுவார்; (சங். 85:8)

நவம்பர் 22
கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன்கொடுப்பார்; கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார். (சங். 29:11)

நவம்பர் 23
சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள். (சங். 37:11)

நவம்பர் 24
இவரே சமாதான காரணர்; (மீகா 5:5)

நவம்பர் 25
உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள். (லூக்கா 2:14)

நவம்பர் 26
அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். (ஏசாயா 9:6)

நவம்பர் 27
எவன் நன்மை செய்கிறானோ அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும். (ரோமர். 2:10)

நவம்பர் 28
சமாதானத்தின் கர்த்தர் தாமே எப்பொழுதும் சகலவிதத்திலும் உங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளுவாராக. (2தெச. 3:16)

நவம்பர் 29
அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று. (கொலோ. 1:20)

நவம்பர் 30
தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. (ரோமர். 14:17)

Trichy

# WE ARE HIRING



- **Social Media Executive**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in social media platforms , Good in English & Tamil*
- **Video Editors**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Premiere Pro & After Effects*
- **Graphic Designers**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Photoshop & Illustrator*
- **Camera Man**
  **with adequate experience**
- **Accountant**
  **(B.com. / M.com. Graduates)**
  *Skills Required : Tally ERP 9*
- **Data Entry Operators**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in computing skills*
- **Correspondence**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Typing & computing skills (Tamil, English, Telugu)*
- **Drivers**
- **Cooks**
- **House Keepers**

- **Male / Female**
- **Christians Preferred**
- **Accommodation will be provided**
- **Apt Remuneration will be paid**

Apply to :

**info@mojindia.org**

# பங்காளர்களின் பக்கம்

## அன்பரின் ஊழிய நீண்ட கால பங்காளர் வாழ்வில் கர்த்தர் செய்த அதிசயங்கள்!

என் பெயர் பிரேமா ஜாய் ஜஸ்டஸ். 1980-ம் வருடத்திலிருந்தே என்னுடைய அண்ணன், அண்ணி வாயிலாக அன்பரின் ஊழியத்தோடு எங்களுக்கு அதிக தொடர்பு ஏற்பட்டது. அந்த நாளிலிருந்தே நாங்கள் Dr.ஆனந்த ஸ்திரா அவர்களுடைய கூட்டம் நாகர்கோவிலில் நடைபெறும் பொழுதெல்லாம் தவறாமல் கூட்டத்திற்கு வர ஆரம்பித்தோம். கூட்டங்களில் சகோதரர் மற்றும் குடும்பத்தினர் தருகிற தேவசெய்தி மிகவும் ஆழமாகவும், வல்லமையுள்ளதாகவும் இருக்கிறது.

### சுகம் தந்த தேவன்!

ஒரு முறை நெய்யூரில் சகோதரர் அவர்களை சந்தித்து ஜெபிக்கும்படி நான் என் மூத்த மகளோடு சென்றேன். மகளுடைய சுகத்திற்காகவும், குடும்பத்தின் இரட்சிப்பிற்காகவும் ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். சகோதரர் ஜெபித்து கூறிய தீர்க்கதரிசனத்தின்படியே என் மகளுக்கு கர்த்தர் நல்ல சுகத்தைக் கொடுத்தார். பிள்ளைகளும் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து வருகிறார்கள்.



### திருமணத் தடையை நீக்கிய கர்த்தர்!

எங்களுடைய 2-வது மகளுக்கு யூனியன் வங்கியில் வேலை கிடைக்க கர்த்தர் உதவி செய்தார். மகளுக்கு நீண்டநாட்களாக திருமண தடை இருந்தது. அதற்காகவும் தக்கலையில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து மகளுக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். ஜெபித்து சென்ற அந்த மாதமே சகோதரர் ஜெபித்து கூறினபடியே என் மகளுக்கு கர்த்தருக்கு பயந்த நல்ல மணமகன் கிடைத்து திருமணம் ஆனது.

### பதவி உயர்வை அருளிய அற்புதர் இயேசு!

எங்களுடைய 3-வது மகன் பினு ஜோசப் வாழ்வில் கர்த்தர் இரண்டு அதிசயங்களைச் செய்தார். மகன் சென்னையில் உள்ள கனரா வங்கியில் Clerk-ஆக வேலை பார்த்துக் கொண்டு வந்தான். அப்பொழுது சகோதரர் அவர்கள் சென்னையில் நடத்திய கூட்டத்திற்கு மகன் சென்று சகோதரரை நேரில் சந்தித்து ஜெபித்து வந்தான். அப்பொழுது சகோதரர் அவர்கள் மகனிடம், "பொருத்தனை செய். உனக்கு கர்த்தர் தாமே உயர்வை கட்டளையிடுவார்" என தீர்க்க தரிசனமாக கூறி ஜெபித்து அனுப்பினார்கள். அதன்படி மகன் இப்பொழுது அதே வங்கியில் ஒரு Officer-ஆக உயர்வு பெற கர்த்தர் தயை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். மகன் உடனே பொருத்தனை காணிக்கையை செலுத்தி கர்த்தரை மகிமைப்படுத்தினான்.

### புது ஜீவனை கொடுத்த ஜீவாதிபதி!

கடந்த கொரோனா 2-வது அலையில் மகனுக்கு காய்ச்சல் வந்தது. அருகில் உள்ள மருத்துவரிடம் சென்றபொழுது டைபாயிடு என கூறி அதற்குரிய சிகிச்சையை அளித்தார்கள். தொடர்ந்து மகன் காய்ச்சலினால் கஷ்டப்பட்டபொழுது பரிசோதனை செய்ததில் கொரோனா பாசிடிவ் என ரிசல்ட் வந்தது. உடனே அருகில் உள்ள அரசு

மருத்துவமனையில் அனுமதித்து தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. இருப்பினும் மகன் மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தான். அன்பரின் ஊழியத்திற்கு தொடர்பு கொண்டு மகனுக்காக ஜெபிக்கும்படி சொன்னோம். அங்கிருந்த ஜெப ஊழியர் ஜெபித்தார்கள். தொடர்ந்து என் மகனுடைய நிலையை அறிந்து, சகோதரர் ஆனந்த ஸ்திரா அவர்கள் எங்களை இரண்டு முறை போன் வழியாக தொடர்புக் கொண்டு மகனுக்காக ஜெபித்து, **"கவலைப்படாதீர்கள், இயேசப்பா சுகம் தருவார்" என்றார்கள்.** எங்களுக்கு அதன்பின் நம்பிக்கை வந்தது. ஒரு சில நாட்களிலேயே மகன் ஆபத்தான கட்டத்திலிருந்து மீண்டு வரவும், பரிபூரண சுகம் பெற்று வீடு திரும்பவும் கர்த்தர் உதவி செய்தார். கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு எங்கள் ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறோம்.

ஊழியத்தை அறிந்த நாளிலிருந்து இன்று வரை நாங்கள் குடும்பமாக **அன்பரின் ஊழியத்திற்கும், S.J.Saves Trust – க்கும்** மாதந்தோறும் காணிக்கை அனுப்பி தாங்கி வருகிறோம். கர்த்தர் தாமே என்னையும், என் கணவரையும், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவரையும் இம்மட்டும் ஆசீர்வாதமாய், எவ்வித குறையுமின்றி கண்மணியைப் போல காத்து வருகிறார். தொடர்ந்து நாங்கள் சாட்சியாக வாழ கர்த்தர் தயை செய்வாராக!

**திருமதி. பிரேமா ஜாய் ஜஸ்டஸ், நாகர்கோவில்.**

அன்புக்குரியவர்களே, சகோதரி பிரேமா ஜாய் ஜஸ்டஸ் குடும்பத்தினர் அன்பரின் ஊழியம் மூலம் நடைபெறுகிற அனைத்து கூட்டங்களுக்கும் தவறாமல் வந்து ஜெபித்து சென்றார்கள். அவர்கள் வாழ்வில் கர்த்தர் செய்த நன்மைகளை இந்தப்பகுதியில் வாசித்து நீங்கள் அறிந்திருப்பீர்கள். நீங்களும் குடும்பமாக கூட்டத்திற்கு வாருங்கள். கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவருக்கும் நல்ல சுகத்தை தருவார். தேவைகளை சந்திப்பார். பொல்லாத சத்துருவின் கட்டுகளிலிருந்து விடுதலையாக்குவார்.

# அன்பரின் ஊழியத்தின் மூலம் நடைபெற்று வரும் கூட்டங்கள்



திருச்சி அன்பரின் ஊழிய ஜெபஸ்தலத்தில் மாதந்தோறும் நடைபெற்று வரும் குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்.

பிற இடங்களில் நடைபெற்று வரும் குடும்ப ஆசீர்வாதக் கூட்டங்கள், நற்செய்தி பெரு விழாக்கள், அற்புத விடுதலை கூட்டங்கள்.



**ஒவ்வொரு மாதமும் இந்த கூட்டங்களை நடத்துவதற்கு பல இலட்சங்கள் தேவைப் படுகிறது. உங்கள் குடும்பத்தின் சார்பாக நீங்கள் sponsor செய்து கூட்டங்கள் இன்னும் பல இடங்களில் நடைபெறுவதற்கு உதவி செய்யுங்கள்! கூட்டங்களுக்கு வருகிற மக்கள் சரீர சுகம், விடுதலை பெறுவதோடு இரட்சிப்பின் சந்தோஷத்தை பெற்று செல்கின்றனர். இத்தகைய ஆத்தும அறுவடை பணிக்கு நீங்கள் மாதந்தோறும் உற்சாகமாய் காணிக்கை அனுப்பி அன்பரின் ஊழியத்தை தாங்குங்கள்! தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பார்.**



# Praise Report
# துதி அறிக்கை

## சந்ததிகளை ஆசீர்வதிக்கும் கர்த்தர்

என் பெயர் ஜெயா. எனக்கு வயது 83. நான் ஓய்வு பெற்ற ஆசிரியை. 1997-ம் ஆண்டிலிருந்து அன்பரின் ஊழிய பங்காளராக நான் இருக்கிறேன். கர்த்தர் எங்கள் குடும்பத்திற்கு செய்த நன்மைகள் ஏராளம். அவற்றில் ஒரு சிலவற்றை இங்கு கூறுகிறேன். என்னுடைய 2-வது மகள், மருமகன், இரு பேரன் களும் வள்ளியூரில் வசிக்கிறார்கள். மருமகன் ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர். 37 ஆண்டுகளாக திருச்சபையில் சபைஊழியராக தொடர்ந்து பணியாற்றி வருகிறார்கள். மகளும் ஓய்வு பெற்ற ஆசிரியை.

அந்த நாட்களில் மகள் பள்ளி ஆசிரியராக பணியாற்றிக்கொண்டிருந்த நேரத்தில், மகளுக்கு தலைமை ஆசிரியராக உயர்வு பெறும் வாய்ப்பு இருந்தப்பொழுது, ஒரு சிலரால் வஞ்சிக்கப்பட்டு வேறு இடத்திற்கு பணிமாறுதல் கொடுத்தார்கள். அதைக்குறித்து நான் அன்பரின் ஊழியத்திற்கு கடிதம் வாயிலாக தெரிவித்து ஜெபிக்கும்படி சொன்னேன். **தொடர்ந்து என் மகள் வேலை செய்த பள்ளியில் பல பிரச்சனைகள் வந்தப் பொழுதும் கர்த்தர் தாமே அவற்றில் ஜெயம் கொடுத்தார். தற்பொழுது என் மகள் எந்த பிரச்சனையும் இன்றி பென்ஷன் வாங்கு வதற்கும் கர்த்தர் உதவி செய்துள்ளார்.**

என்னுடைய மூத்த பேரன் பெயர் ஜோசப். **2019-ம் வருடம் பேரனுக்கு கொரோனா நோய் தொற்று ஏற்பட்டு அதிக கஷ்டப்பட்டான். கர்த்தர் தாமே அதிலிருந்தும் பேரனை விடுவித்து அற்புத சுகத்தைக் கொடுத்து பாதுகாத்தார்.** அவன் படித்து முடித்து வங்கி வேலைக்காக 10 வருடங்கள் முயற்சி செய்துக் கொண்டிருந்தான். அதற்கான மூன்று நேர்முகத் தேர்விலும் பேரன் தேர்வு செய்யப்படவில்லை. **பேரனுடைய வேலைக்காக ஜெபிக்கும்படி Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் கேட்டுக் கொண்டேன். கடைசி இன்டர்வியு-வில் பேரன் தேர்வு செய்யப்பட்டு, பேரனுக்கு தமிழ்நாடு கிராம வங்கியில் கிளர்க் வேலை கிடைக்கும் படி கர்த்தர் தயை செய்தார்.**

**சமீபத்தில் என்னுடைய இளைய பேரனை அன்பரின் ஊழியத்திற்கு பணி செய்ய அனுப்பிய கொஞ்ச நாளிலேயே மூத்த பேரனுக்கு வங்கியில் வேலை கிடைத்தது எங்களுக்கு அதிக சந்தோஷத்தை தந்தது. கர்த்தருக்கு நான் செய்த பொருத்தனையின் படியே பேரனின் முதல் மாத சம்பளத்திலிருந்து Rs.10,000/-த்தை S.J.Saves Trust-ல் உள்ள ஏழைப் பிள்ளைகளுக்கு உதவி செய்ய இந்த தொகையை தருகிறேன்.**

இளைய பேரனின் பெயர் ஜோன்ஸ். சிறுவயதில் அவனுடைய கைகளில் உள்ள பத்து விரல்களில் பருக்கள் (அரப்பலை) ஏராளமாய் வந்திருந்து அதிக கஷ்டப்பட்டான். அதற்காக பல சிகிச்சைகள் எடுத்தும் குணமாகவில்லை. அந்த நேரத்தில் **திருநெல்வேலியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு பேரனை அழைத்து வந்து Rev.Dr.A. ஜாஷ்வா அவர் களிடம் பேரனுடைய கைகளை காண்பித்து ஜெபிக்கும்படி சொன்னேன். அதன்பின் ஓரிரு நாட்களிலேயே அந்த பருக்கள் முழுவதும் அற்புதமாக மறையும்படி கர்த்தர் உதவி செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.**

**கர்த்தர் தாமே என் சந்ததிகளுக்கு செய்து வருகிற நன்மைகளை நினைத்து நானும் என்னால் முடிந்த வரை ஊழியத்திற்கு காணிக்கை அனுப்பி தாங்கி வருகிறேன். கர்த்தருடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக!**

**- திருமதி. S. ஜெயா, கண்டிகைபேரி.**

## நீண்ட நாள் திருமண தடை நீங்கியது!



எனக்கு திருமணம் ஆகாமல் பல வருடங்களாக தடை ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. இந்நிலையில் **என் வீட்டிற்கு அருகில் இருந்தவர்கள் திருச்சி அன்பரின் ஊழியத்தில் ஒவ்வொரு மாதமும் அற்புத குடும்ப ஆசீர்வாத ஜெபம் நடைபெறுகிறது அதில் கலந்து கொண்டு ஜெபித்தால் நிச்சயம் திருமண தடை நீங்கும் என்றார்கள்.** எனவே அக்கூட்டத்தில் கலந்து கொண்டேன். அதில் **Dr.ஜேன் ஜாஷ்வா அவர்கள் எனக்காக ஜெபித்து தடைநீங்கி சீக்கிரம் திருமணம் நடைபெறும் என்றார்கள். அதேபோல ஒரே வாரத்தில் எனது திருமணம் நிச்சயிக்கப்பட்டது. திருமணமும் மிகவும் நல்ல படியாக நடந்தது.** திருச்சி ஜெப மையத்திற்கு வந்து கூட்டத்தில் கலந்துகொண்டு ஜெபித்து சென்றது மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- திரு. சரவணன், திருக்காட்டுப்பள்ளி**

## கண் பார்வை கிடைத்தது!

ஆகஸ்ட் மாதத்தில் திடீரென்று எனது இடது கண் பார்வை இல்லாமல் போய்விட்டது. அந்த சூழ்நிலையில் ஆகஸ்ட் 15ம் தேதி விஜயதா திருமண மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டேன். **Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் எனது கண் பார்வைக்காக ஜெபித்தார்கள். அவர்கள் ஜெபத்தை கேட்ட அன்பின் தேவன் எனக்கு கண் பார்வையை கட்டளையிட்டார். இப்பொழுது என்னால் நன்றாக பார்க்க முடிகின்றது. படிக்க முடிகின்றது. கர்த்தருக்கு ஸ்தோத் திரம்!**



**- திருமதி. ராதாமணி, நாகர்கோவில்**

## பொல்லாத ஆவியிடமிருந்து அற்புத விடுதலை!



ஒரு தீய ஆவி என்னிடம் எப்போதும் பேசிக் கொண்டே இருக்கும். எனக்கு இது ஏன் பேசுகிறது என்று ஒன்றுமே புரியவில்லை பயமாக இருந்தது. நான் யாரிடமாவது பேசிக் கொண்டிருந்தால் எனக்கு முன்பாக வந்து நிற்கும். இதனால் எனக்கு நிம்மதி என்பதே இல்லாமல் போய்விட்டது. ஒருவித மனஅழுத்தத்துடன் வாழ்ந்து வந்தேன். என் காதில் எப்பொழுதும் சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கும். **அந்த நேரத்தில் நாகர்கோவிலில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்து கொண்டேன்.** எனக்குள்ள பிரச்சனையை எப்படி ஐயா அவர்களிடம் சொல்வது என தயங்கியபடியே நின்றேன். **என்னை கவனித்த ஐயா அவர்கள் "உனது காதில் வெகு நாட்களாக ஒரு சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கிறதா?" என்று கேட்டார்கள். இதைக் கேட்டு நான் ஆச்சரியமடைந்தேன். எனக்காக அதிக பாரத்துடன் ஜெபித்தார்கள். அந்த நாளிலிருந்து தீய ஆவியின் சத்தம் கேட்பது நின்று போனது. எனக்குள்ளிருந்த பயம் நீங்கி பெரிதான விடுதலையை பெற்றேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!**

**- திரு. ராஜேஷ், நாகர்கோவில்**



# S J SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

* நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக, நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம் (கலாத்தியர் 6:9)
* சகோதரரே, நீங்கள் நன்மை செய்வதிலே சோர்ந்து போகாமலிருங்கள். (2 தெச. 3:13)

**கர்த்தருடைய பெரிதான கிருபையினாலும், அவர் நம்மேல் வைத்துள்ள மனதுருக்கத்தினாலும் அன்புள்ளம் கொண்ட உங்களது உதவியினாலும் கீழ்க்கண்ட நற்பணியை செய்ய தேவன் அநுக்கிரகம் செய்தார்.**

சேலம் மாவட்டத்தை சார்ந்த ஏரிக்காடு, எம்.பெருமாபாளையம், கருமாபுரம், ஆத்தூர், காளாண் பண்ணை ஆகிய கிராமங்களில் வசிக்கும் ஏழை, எளிய பிள்ளைகளுக்கு கடந்த மாதம் பல உதவிகள் செய்தோம்.

## கிராம மக்களின் சூழ்நிலை

இந்த கிராமத்தில் உள்ள பிள்ளைகள் பள்ளிக்கூடம் செல்ல முடியாதவர்களாய் இருக்கிறார்கள். ஏனென்றால் பிள்ளைகளின் பெற்றோர்கள் இளம் வயதிலேயே கொடிய வியாதியால் பாதிக்கப்பட்டு மரித்துப்போகின்றனர். ஆண்கள் கடினமான கூலி வேலைகள் செய்வதின் நிமித்தம் குடிபழக்கத்திற்கு உள்ளாகி, உடல்நிலை பாதிக்கப்பட்டு இளம் வயதிலேயே தன் மனைவி, பிள்ளைகளை விட்டு மரித்து விடுகிறார்கள்.

மிகப்பெரிய வாகனங்களில் ஓட்டுனராக இருப்பவர்களில் ஒரு சிலர் மாதக்கணக்கில்கூட வீட்டிற்கு வரமுடியாமல் வெளியிடங்களில் தங்கி விடுகின்றனர். இதனால் பல தீயபழக்கத்திற்கு உள்ளாகி அதன் மூலம் தங்கள் உடலில் பல தீராத வியாதிகள் ஏற்பட்டு கஷ்டப்படுகின்றனர். இதனால் அவர்கள் மனைவிக்கும் அந்த வியாதி பரவுகிறது. அத்துடன் மரிப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகிறது. தாய்மார்கள் இக்கொடிய வியாதியால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். எனவே சமுதாயத்தில் அவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். ஒருவரும் அவர்களுக்கு வேலை கொடுப்பதில்லை. இந்த வியாதி அவர்களை அனுதினமும் கொல்லுகிறது. இதன் நிமித்தம் தங்களுடைய பிள்ளைகளையும் பள்ளிக்கு அனுப்பாமல் 8 வயது, 10 வயது ஆன பிள்ளைகளை பூ பறிக்கும் வேலைக்கும், சிறுசிறு கூலி வேலைக்கும் அனுப்பிவிடுகிறார்கள். அவர்கள் வாங்குகிற குறைந்த சம்பளத்தில் சாப்பிட்டும், சாப்பிடாமலும் வாழ்ந்து வருகிறார்கள். இந்த பிள்ளைகளை பார்க்கும்பொழுது நமக்கு அதிக வேதனையாகவே இருக்கும்.

**இப்படி பாதிக்கப்பட்ட குடும்பத்தில் பிறந்த காசி (வயது 12) என்பவனுக்கு திடீரென்று பேருந்து மோதி கால் எலும்பு முறிவு ஏற்பட்டது. அறுவை சிகிச்சை செய்து ராடு வைத்தார்கள். அவனால் பள்ளிக்கு செல்ல முடியவில்லை. பெற்றோரும் கொடிய நோயால் கஷ்டப்படுகிறார்கள். அந்த சிறுவன் கூலி வேலைக்கு சென்று குடும்பத்தை காப்பாற்றுகிறான்.**

**ராஜேஸ்வரி என்னும் 10 வயது சிறுமி தாய், தகப்பன் இல்லாமல் தனது மிகுந்த பெலவீனப்பட்ட பாட்டியுடன் வசிக்கிறாள். இவளுக்கு ஒரு தம்பி மற்றும் இரண்டு தங்கைகள் உண்டு. இவர்களுக்கு எல்லாம் அந்த 10 வயது நிரம்பிய சிறுமி சமைத்து, குளிப்பாட்டி வீட்டை கவனிக்க வேண்டிய**

**சூழ்நிலையில் இருக்கிறாள். வெளி உலகமே அவளுக்கு தெரியவில்லை. எல்லாரும் என்னை அன்புடன் தாத்தா என்று அழைக்கும் பொழுது இந்த பிள்ளை மாத்திரம் நடுங்கி ஒரு மூளையில் உட்கார்ந்து கொள்வாள். அவளோடு கூட வந்த மற்ற 52 பிள்ளைகளிடமும் பேச பயப்படுவாள். 10 வயது நிரம்பிய சிறுமி ஐந்து வயது சிறுமியை போல இருக்கிறாள். சரியான உணவு இல்லை, அணிந்து கொள்ள சரியான துணியில்லை. எத்தனை பரிதாபம் பாருங்கள்.**

**உங்கள் சகோதரனாகிய நான் அந்த அன்பு பிள்ளையை அரவணைத்து தைரியம் சொல்லி நமது ட்யூசன் மையத்தில் சேர்த்து படிப்பதற்கு எல்லா வசதியும் செய்து கொடுத்தேன். அத்துடன் அவளை சரியான முறையில் கவனிக்க அங்குள்ள SJ Saves Trust மேற்பார்வையாளருக்கும், ஆசிரியர்களிடத்திலும் ஆலோசனை கூறியதை பார்த்து அந்த கிராமத்து மக்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். எப்படி இதை நாம் இலவசமாக செய்கிறோம் என்று எண்ணி கண்ணீர் வடித்தார்கள். இது ஒரு உதாரணம் தான்.**

இப்படி அநேக பிள்ளைகள் மலையோரத்தில் உள்ள ஒதுக்குப்புற கிராமங்களில் கஷ்டப்படுகிறார்கள். தாய் தகப்பனுக்கு கொடிய வியாதி இருப்பதால் யாருமே எந்த ஒரு பொது இடத்திற்கும் வர முடியாதவர்களாய் இருக்கிறார்கள். அரசு மருத்துவமனைக்கு வருவதற்கு கூட தயங்குகிறார்கள். தங்கள் வியாதியை குறித்து மற்றவர்கள் தெரிந்து கொள்வார்கள் என்று பயப்படு கிறார்கள். ஆகவே உங்கள் சார்பில் நான் அவர்களில் ஒருவராக பழகி தெய்வீக அன்பைப் பற்றி கூறுகிறேன்.

## அக்டோபர் மாதத்தில் நாம் செய்த அன்பின் நற்பணிகள்!

**கொடிய நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்கள் பிள்ளைகளுக்கும் தேவையான மருந்து, மாத்திரைகள், வைட்டமின் டானிக், புரோட்டீன் பவுடர், நல்ல உணவு வகைகளை வழங்கினோம். அவர்கள் மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டார்கள்.**

**அரிசி, துவரம் பருப்பு, கொண்டை கடலை, சர்க்கரை, சீரகம், கடுகு, மல்லிதூள், மிளகாய் தூள், மஞ்சள் தூள், கோதுமை மாவு, ரவை, உப்பு எண்ணெய் போன்ற மளிகைப் பொருட்களையும் வழங்கினோம். அத்துடன் புது புடவைகள், துணி துவைக்கும் சோப் கொடுக்கப்பட்டது.**

நானும், நமது ட்யூசன் மையத்தில் வேலை பார்க்கும் ஆசிரியர்களும் காண்பித்த அன்பினால் அவர்கள் ஆறுதல் அடைகின்றனர். நோயினால் பாதிக்கப்பட்ட மக்கள் நூற்றுக்கணக்கில் ஒதுக்குப்புற கிராமங்களில் வசிக்கிறார்கள். நமது அறக்கட்டளை மூலம் கிறிஸ்துவின் அன்பை அவர்களுக்கு வெளிப்படுத்தி வருகிறோம். இந்த நற்பணிகள் இன்னும் தேவையில் இருக்கிற மக்களை சரியாக சென்றடைய ஜெபியுங்கள்.

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act-ன்படி Sec. 80G Exemption உண்டு**

# கிறிஸ்துமஸ் நன்னாளில் ஓர் ஏழையின் முகத்தில் சிரிப்பைக் காண உதவுவோம்!

ஒவ்வொரு வருடமும் கிறிஸ்துமஸ் பண்டிகை காலங்களில் நம் **S.J.Saves Trust**-ல் உள்ள ஏழைப் பிள்ளைகள், ஏழை விதவைகள் மற்றும் ஆதரவற்ற வயோதிபர்களுக்கு புத்தாடைகள், இனிப்புகள், பரிசுப்பொருள்கள் மற்றும் பிரியாணி கொடுத்து அவர்களை மகிழ்வித்து வருகிறோம். இந்த ஆண்டும் இத்தகைய நற்பணிகளுக்கு நீங்கள் உதவி செய்யும்படி அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

**500 ஏழை, எளிய பிள்ளைகளுக்கும், 500 ஏழை விதவைப்பெண்களுக்கும், ஆதரற்ற வயோதிபர்களுக்கும் புத்தாடைகள் வாங்கிக் கொடுக்க உதவி செய்யுங்கள்.**



**ஒரு நபருக்கு கிறிஸ்துமஸ் அன்பளிப்பு = Rs.1500/-**

**1000 x 1500 = Rs. 15,00,000/-**

**அந்நாட்களில் விருந்துண்டு சந்தோஷங்கொண்டாடவும், ஒருவருக்கொருவர் வரிசைகளை அனுப்பவும், எளியவர்களுக்குத் தானதர்மஞ்செய்யவும் வேண்டுமென்று திட்டம்பண்ணினான். எஸ்தர் 9:22**



**சேலம் மாவட்டத்தைச் சார்ந்த ஏரிக்காடு, எம்.பெருமாபாளையம், கருமாபுரம், ஆத்தூர், காளான் பண்ணை ஆகிய கிராமங்களில் வசிக்கும் ஏழை, எளிய பிள்ளைகளுக்கும், ஆதரவற்ற பெண்களுக்கும் உதவிகள் வழங்கினோம். அதில் ஒரு பகுதியினர்**

சிறுமி ராஜேஸ்வரி மற்றும் சிறுமியின் தம்பி,
இரண்டு தங்கைகளுடன் நமது சகோதரர்














# S.J.S.T கிராமப்புற மருத்துவமனை பணிகள்

**பலியையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் - மத். 12:7**

**பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை - மாற்கு 2 : 17**

நாம் வாழுகின்ற இந்த உலகம் அழிவை நோக்கி போய் கொண்டிருக்கிறது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். ஒவ்வொரு நாளும் ஏராளமான மக்கள் தொலைப்பேசி, மின்னஞ்சல், சமூக வலைதளங்கள் வாயிலாக எங்களோடு தொடர்பு கொள்கிறார்கள். அவர்களில் பலர் வியாதிகளின் கொடுமையை எங்களிடம் கூறி ஜெபிக்கும்படி கேட்பார்கள்.

நமது கூட்டங்களில் கலந்து கொள்பவர்களும் பல்வேறு வியாதிகளால் கஷ்டப்படுகிறவர்களாக இருக்கிறார்கள். அதில் பலர் தீராத வியாதியால் மாதக் கணக்கில் வருடக்கணக்கில் பாடுபடுகிறார்கள். ஏராளமான மருத்துவமனைகள் பட்டணங்களில் குவிந்து காணப்பட்டாலும் நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகிறது. இதை எல்லாம் பார்க்கும்பொழுது நம் கண்கள் கண்ணீர் சிந்துகிறது.

இயேசுவும் தம்முடைய ஊழியத்தில் தீராத வியாதி உள்ளவர்களை குணமாக்கி, மரித்தோரை எழுப்பி, குருடர்களை பார்வையடையச் செய்து, செவிடர்களை கேட்கச் செய்து, முடவர்களை நடக்க வைத்து, அதன்மூலம் தேவ அன்பினை வெளிப்படுத்தினார்.

**இயேசு கிறிஸ்து தம்முடைய தழும்புகளால் நம்மை குணமாக்குகிறார். அவர் சகலவிதமான நோய்களையும் நம்மை விட்டு அகற்றுகிறார். இப்படிப்பட்ட ஒரு மருத்துவரை உலகத்தில் நாம் எங்கும் பார்க்க முடியாது. மருத்துவர்கள் நாம் சுகமாக மருந்து கொடுப்பார்கள். ஆனால் இயேசு கிறிஸ்து ஒருவரே மெய்யாகவே நம்முடைய நோய்களை சுமந்தவராக இருக்கிறார். இதை மனதில் வைத்து தான் ஜாதி, மத, இன வேறுபாடின்றி ஜனங்கள் நன்மை பெற்று வருகிறார்கள்.**

**S J Saves Trust Rural Hospital ஆனது ஐந்து வருடமாக ஒரு சிறிய புற நோயாளிகளுக்கான மருத்துவமனையாக இருந்தது. இன்று உங்கள் ஜெபத்தாலும், நன்கொடைகளாலும் வளர்ந்து வருகிறது. இங்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எனவே நாம் அவசரமாக சிறந்த ஒரு மருத்துவமனையை ஏற்படுத்த வேண்டும். அதை நமது தேவனுடைய பேழை நிலத்தில் கட்டி எழுப்ப வேண்டும். இதற்காக தொடர்ந்து ஜெபியுங்கள்.**

நாம் சுகமாக இருக்கும் பொழுது நோய்வாய்பட்டு, அதிக கஷ்டப்படுகிற நோயாளிகளை நினைப்போம், அவர்களுக்கு உதவி செய்வோம். அப்பொழுது யோபுவிற்கு இரங்கின தேவன் உங்களுக்கும் இரங்கி உங்களை சுகப்படுத்துவார். கிறிஸ்துவுக்காக எழும்பி பிரகாசிப்போம், உலகத்தை அசைப்போம். கர்த்தருக்காக பெரிய காரியங்களை செய்வோம்.

**உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள்; அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன்**

**- யாத். 23: 25**

**அவர் உன் அக்கிரமங்களை யெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்கு கிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வால வயது போலாகிறது.**

**- சங்கீதம் 103: 3-5**




# உலகச் செய்திகள்

☞ 2022ம் ஆண்டிற்கான நோபல் பரிசு அக்டோபர் 3ம் தேதி முதல் அறிவிக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இந்த ஆண்டு மருத்துவத்துறைக்கான நோபல் பரிசை ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த மரபியல் நிபுணரான ஸ்வாண்டே பாபோ பெற்றார். இயற்பியலுக்கான நோபல் பரிசுபிரான்ஸ் நாட்டின் அலைன் ஆஸ்பெக்ட், அமெரிக்காவின் ஜுன் எப்கினாசர் மற்றும் ஆஸ்திரியாவின் அண்டன் ஸிலிங்கர் ஆகிய மூன்று பேருக்கு வழங்கப்பட்டது.

☞ வேதியியலுக்கான நோபல் பரிசு அமெரிக்காவின் பேரி ஷார்ப்லஸ், கேரோலின் பெர்டோசி, டென்மார்க்கின் மார்டென் மெல்டால் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. இலக்கியத்திற் கான நோபல் பரிசு ஆனி எர்னாக்ஸிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பெற்ற பெண் எழுத்தாளர் இவர்தான்

☞ இந்நிலையில் அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப் பட்டுள்ளது. பெலாரஸைச் சேர்ந்த மனித உரிமை வழிக்கறிஞர் அலெஸ் பியாலியாட்ஸ்கிற்கும், ரஷ்ய மனித உரிமைகள் அமைப்பு நினைவகம் மற்றும் சிவில் உரிமை களுக்கான உக்ரேனிய மனித உரிமைகள் அமைப்பிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

☞ மனித உரிமைமீறல்கள், போர் குற்றங்கள், அதிகார துஷ்பிரயோகம் ஆகியவற்றை ஆவணபடுத்த மேற்கொண்ட முயற்சிகளுக்காக அலெஸ் பியாலியாட்டிஸிற்கும், ரஷ்யா உக்ரைன் மேல் போர் தொடங்கியதில் இருந்து நடக்கும் போர்க் குற்றங்களைப் பற்றித் தொடர்ந்து உலக அரங்கில் எடுத்துரைத்து வந்த ரஷ்ய மனித உரிமைகள் அமைப்பு நினைவகத்திற்கும், மனித உரிமைகளைக் காத்தல், உக்ரைன் ஜனநாயகத்தை வலுப்படுத்த ஆற்றிய பெரும் பங்கு போன்றவற்றிற்காக உக்ரேனிய மனித உரிமைகள் அமைப்பிற்கும் அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

## தீராத வியாதியா! வாழ்க்கையில் போராட்டமா!!
## ஆசீர்வாதமே இல்லையா?

- கவலையே வேண்டாம்
- உங்களுக்கு உதவி செய்ய
- நீங்கள் இழந்தவற்றை திரும்ப பெற
- கர்த்தர் ஒரு அதிசயம் செய்வார்.

நேரம் :
காலை 9.00 மணி முதல்
2.00 மணி வரை

# அற்புத குடும்ப ஆசீர்வாத ஜெபம்

நவம்பர் **26** சனிக் கிழமை

இடம் : அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்,
10வது குறுக்குத்தெரு, மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி - 18.

தேவ செய்தி

## Dr. ஆனந்த ஸ்திரா & குடும்பத்தினர்

தொடர்புக்கு : (0431 – 2765386, 2741925) 94888 45627

## அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்

நம்பிக்கை TELEVISION

புதன்
மதியம் 12.00 – 12.30

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

ARADANA TV
புதன், வியாழன், வெள்ளி
இரவு 7.00 – 7.30

மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

HARVEST TV கேரளம்
சனி
இரவு 7.30 – 8.00

**Tamil Whats App No: 95004 87059**







dranandastira@mojindia.org, margret@mojindia.org,
joshua@mojindia.org, jane@mojindia.org,
info@mojindia.org

**Telugu Whats App No: 91770 87860**



# Rev.Dr. A. ஜாஷ்வா அவர்கள் ஜெபத்தினால் மகத்துவ தேவன் செய்த மகத்தான அற்புதங்கள் தேவநாமம் மகிமைக்காக!

## தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்தின கர்த்தர்!

நான் தபால் தந்தி துறையில் வேலை பார்த்து ஓய்வு பெற்று இருக்கிறேன். எனக்கு நீண்ட நாட்களாக



இரு கால் மூட்டுகளிலும் அதிக வேதனை, வலி இருந்து வந்தது. Rev.Dr.A. ஜாஷ்வா அவர்கள் நடத்துகிற மதுரை கூட்டத்திற்கு செல்ல வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் காலை நேரத்தில் என்னால் எழும்ப முடியவில்லை. எப்படி கூட்டத்திற்கு செல்வேன் என கவலைப்பட்டேன். **மூட்டு வலியுடன் தான் கூட்டத்திற்கு வந்தேன். ஜெப வேளையில் என்னுடைய தள்ளாடுகிற முழங்கால்களை கர்த்தர் தாமே பலப்படுத்தினார். இப்பொழுது மூட்டுவலி இல்லை. நல்ல சுகத்தைக் கொடுத்த கர்த்தரை துதிக்கிறேன்.**

**- சகோ. பிரிட்டோ நாகராஜன், மதுரை**

## சிறுநீரக நோயிலிருந்து பாதுகாத்து வரும் பரமதேவன்!

கடந்த நாளில் எனது மனைவிக்கு சிறுநீரகக் கோளாறு ஏற்பட்டு மிகவும் கஷ்டப்பட்டார்கள். பரிசோதனை செய்த மருத்துவர் உடனடியாக



டயாலிசீஸ் செய்யும்படி கூறினார். டயாலிசீஸ் செய்ய வேண்டுமென நினைக்கும் பொழுது எங்கள் மனம் மிகவும் கலங்கியது. இந்நிலையில் எங்கள் வீட்டிற்கு அன்பரின் ஊழிய மாதப்பத்திரிக்கை வந்தது. அதில் Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் **"செய்யப்படாத அதிசயங்களை கர்த்தர் உங்கள் வாழ்விலும் செய்வார்"** என்ற தலைப்பில் தேவ செய்தியை எழுதியிருந்தார்கள். அந்த செய்தியை ஜெபத் தோடு வாசித்தேன். கர்த்தர் எனது விசுவாசத்தை அதிகரிக்க செய்தார். அந்த புத்தகத்தை வைத்து எனது மனைவிக்காக ஜெபித்தேன். **மருத்துவர்கள் டயாலிசீஸ் செய்யும்படி சொல்லியிருந்தார்கள். ஆனால் நாங்கள் இதுநாள் வரை டயாலிசீஸ் செய்யவில்லை. கர்த்தர் எனது மனைவியை அற்புதமாய் பாதுகாத்து வருகிறார். இப்பொழுது நன்றாக சாப்பிடுகிறார்கள், எல்லா வேலைகளையும் செய்கிறார்கள். எனது மனைவி என்னிடம் சொன்னபடியே பொருத்தனை காணிக்கையை பாஸ்டர் அவர்களிடம் தருகின்றேன். கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!**

**திரு. விக்டர் பழனிசாமி, சென்னை**

## ஜெப வேளையில் சுகம் பெற்றேன்



எனக்கு கடந்த சில நாட்களாக மூட்டு வலி ஏற்பட்டு அதிக கஷ்டப்பட்டு வந்தேன். இந்நிலையில் உங்கள் விடுதலையின் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டேன். ஜெபவேளையில் Dr.ஜேன் ஜாஷ்வா அவர்கள் தேவனால் ஏவப்பட்டு **"மூட்டுவலி உள்ள வர்களுக்கு இந்த வேளையில் கர்த்தர் சுகத்தை தருகின்றார்"** என்று கூறினார்கள். அந்த நொடிப்போழுதே **எனக் கிருந்த மூட்டுவலி நீங்கியது.** சுகம் தந்த தேவனை துதிக்கின்றேன்.

**- திருமதி. ராணி, சென்னை**